
ஸ்ரீ ஹரி:

# மதுரமுரளி

ஜூன் *2017*
வேணு *22*
கானம் *11*



தனி பிரதி ***Rs 15/-***
ஆண்டு சந்தா ***Rs 180/-***

**மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன் வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிகை**

Delivered by India Post www.indiapost.gov.in

**ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் முன்னிலையில் சத்சங்கம், கீர்த்தனாவளி மண்டபம், காஞ்சிபுரம்**






**<u>முன் அட்டை:</u>**
**மதுவனத்தில் த்ருவன்**

**சென்ற மாத இதழிலும், இந்த மாத இதழிலும் முன் அட்டை படம் - குமாரி ராதிகா**

NO FAME
NO SELF INTEREST
NO NAME
ONLY GOD

**ஹரே ராம ஹரே ராம**
**ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண**
**க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

மதுரமுரளி
வேணு 22 | கானம் 11

# பொருளடக்கம்

| | |
|---|---|
| 5 | மதுரமான மஹனீயர் -255 |
| 7 | கேள்வி பதில் |
| 8 | ஆத்ம சகாக்களுக்கு ஒரு கடிதம் |
| 10 | நாமம் ஒன்றே போதுமே |
| 11 | சுழற்சியிலிருந்து விடுபடுவோம் |
| 16 | பக்தி சுகந்தம் |
| 18 | பாலகர்களுக்கு ஒரு கதை |
| 26 | செய்திகள் |
| 32 | மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை |
| 34 | பாரம்பரிய பொக்கிஷங்கள் |
| 37 | ஆளுமை |
| 38 | சைதன்ய மஹாப்ரபு |
| 41 | படித்ததில் பிடித்தது |



# மதுரகீதம்

**ராகம்: ஜோன்புரி**
**தாளம்: ஆதி**

சந்த்ரஶேகரமஹம் ப்ரணமாமி
கைலாஸ வாஸினம் கௌரி மனோஹரம்
இந்த்ராதி வினுத நந்தி வாஹனம்

மன்மத ஹரணம் உன்மத்த ரூபம்
அம்ருத கடேஷ்வரம் ம்ருத்யுஞ்சயம்
ப்ரதோஷகால ப்ரியம் பக்தானுகூலம்
ஶிவமுரளீதர வினுதம் பரமவைஷ்ணவம்

# மதுரமான மஹநீயர்

சென்ற இதழில், என் மனதில் இருந்த சில விஷயங்களைத் தங்களுடன் பகிர்ந்து கொண்டேன், அவ்வளவுதான்! அந்த இதழ் ஒவ்வொருவருடைய கைகளிலும் கிடைத்ததுதான் தாமதம், phone calls வந்துகொண்டே இருந்தன. பலர், phone லேயே அழ ஆரம்பித்துவிட்டார்கள். மேலும் பலர், தங்களுடைய கவலைகளைத் தெரிவித்தார்கள். சிலர், ‘எங்களுக்குத் தனியாக ஒரு guest house உள்ளது. அங்கு வந்து அமைதியாக ஓய்வு எடுத்துக் கொள்ளலாம், ஆயுர்வேத சிகிச்சை எடுத்துக்கொள்ள எல்லா வசதிகளும் ஏற்பாடு செய்து தருகிறோம்’ என்று தெரிவித்தார்கள். மேலும் சிலர், ‘நீங்கள் ஆசிரமத்திலேயே தங்கியிருங்கள், அது போதும். நாங்கள் வந்து தங்களைப் பார்த்துக் கொள்கிறோம்’, என்றார்கள். சிலர், ‘என்ன எழுதினாலும் உங்களை விடமாட்டோம். உங்களை வந்து ஏதாவது பிடுங்கிக் கொண்டேதான் இருப்போம்’, என்று உரிமையுடன் சொன்னார்கள்.

ஏகாதசி அன்று நேரில் வந்த பலர், ‘உங்களுக்கு ஒன்றும் ஆகாது ஸ்வாமி, நாங்கள் இருக்கிறோம், கவலைப்பட வேண்டாம்’, என்றார்கள். பலர் கடிதங்கள் எழுதி, அவர்களது அன்பை வெளிப்படுத்தினார்கள். மற்றும் பலர் கோவில்களில் பூஜை செய்து பிரசாதம் அனுப்பியுள்ளார்கள். இந்தியாவிலும், வெளிநாட்டிலும் உள்ள ஸத்சங்கங்களில், இதைப் படித்துவிட்டு எல்லோரும் கவலையுற்றனர். பலர் பிரார்த்தனை செய்தார்கள். இவைகளை எல்லாம் பார்க்கும்போது, எல்லோரும் நம்மீது வைத்திருக்கும் அன்பு, நம்மைத் திக்குமுக்காடச் செய்கின்றது.

*நான் யாருக்கும் எந்த நன்மைகளையும்*
*செய்ததில்லை. அப்படியும் ஏன்*
*இவ்வளவுபேரும் என்னிடம் இவ்வளவு*
*அன்பாக இருக்கின்றார்கள்?, என்று எனக்கு*
*நானே கேள்வி கேட்டுக்கொண்டேன்.*
*உண்மையிலேயே நான் எல்லோரிடமும்*
*ஆத்மார்த்தமாக அன்பு செலுத்துகின்றேன்.*
*அவர்கள் அனைவரையும் நான்*
*நேசிக்கின்றேன். அதுதான் காரணம்போலும்.*

நான், ‘அப்படி எழுதியிருக்கவேண்டாமோ’, என்றுகூட நினைக்கின்றேன். ‘அப்படி எழுதிப் பலருக்கு மன வருத்தத்தைக் கொடுத்துவிட்டேனோ’ என்றும் நினைக்கின்றேன். அதற்காக வருந்துகின்றேன். அன்பிற்கு, அன்புதான் பதிலாக இருக்க முடியும் அல்லவா? இவைகளை எல்லாம் பார்க்கும் பொழுது, ஆங்கிலத்தில் Robert Frost என்ற ஒரு கவிஞரின் கவிதை வரிகள்தான் என் நினைவிற்கு வந்தது. அதை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

The woods are lovely, dark and deep,
But I have promises to keep,
And miles to go before I sleep,
And miles to go before I sleep.

-ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி

சென்ற மதுரமுரளி இதழில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் தெரிவித்த சில விஷயங்களைத் தங்களுடன் பகிர்ந்து கொண்டோம். அதைப் படித்துவிட்டு, இந்தியாவிலிருந்தும், உலகின் பல்வேறு இடங்களிலிருந்தும், நமது ஸத்சங்க அன்பர்கள் ஸ்ரீ ஸ்வாமிஜியின்பால் தாங்கள் பூண்டுள்ள அன்பை வெளிப்படுத்திய விதம், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களை மிகவும் நெகிழவைத்தது. ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அதற்கு உரைத்த பதிலே, மேற்கண்டவாறு தங்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளது.

- Dr ஆ பாக்யநாதன்

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

## மஹான்களின் தரிசனத்தால் மட்டுமே நமக்கு பக்தி, ஞான, வைராக்யம் எல்லாம் வந்து விடுமா? அல்லது அவர்கள் நமக்கு சங்கல்பம் செய்து, தொட்டு, அல்லது மந்திர உபதேசம் செய்து அருள் செய்ய வேண்டுமா?

**அப்படித் தேவையில்லை! சில உதாரணங்களைக் கொண்டு பார்ப்போமே! உங்களுக்குப் பிடித்த ஒரு உணவுப் பொருள் உங்கள் முன்பாக வைக்கப்பட்டுள்ளது என்று வைத்துக்கொள்வோம். நீங்கள் அதை பார்த்தவுடன் எவ்வளவு கட்டுப்படுத்த முயற்சித்தாலும் முடியாமல் நாவில் உமிழ்நீர் வருகின்றதல்லவா? அந்த உணவுப் பொருள், புலன்கள் மூலமாக உங்கள் உணர்வை தூண்டுகின்றது அல்லவா? அதுபோல் தான் இதுவும். உங்களுக்கு அது நாக்கு சபலம் என்றால் மகான்களுக்கு இது க்ருபை!**

**ஒரு பசு மாடு, கன்றைப் பார்த்த மாத்திரத்தில், வேறு எந்த சங்கல்பமும் இல்லாமல் தானாகவே அதன் மடியில் பால் சுரக்கிறதே! கன்றைப் பார்த்த பசுவின் மனதில் ஒரு வித உணர்வு தூண்டப்படுவதால்தானே பால் சுரக்கிறது? அதுபோல்தான் இதுவும். பசுமாட்டிற்கு அது வாத்சல்யம் என்றால் மகான்களுக்கு இது க்ருபை!**

**ஒரு அன்பான கணவன், மனைவியைப் பிரிந்து வேலை நிமித்தமாக வெளியூரில் உள்ளான். தனது மனைவியின் எண்ணம் வந்த மாத்திரத்தில், ஒரு முயற்சியும் இல்லாமல் ஒரு புன்முறுவலுடன், அவனது முகமே பிரசன்னமாக ஆகிவிடுகிறதே! மனைவியின் எண்ணம் வந்ததுமே ஒருவித உணர்வு அவனது இதயத்தில் தூண்டப்படுவதால்தானே முகம் பிரசன்னமாகியது! அதுபோல் தான் இதுவும். அன்பான கணவனுக்கு அது பாசம் என்றால் மகான்களுக்கு இது க்ருபை!**

**நீங்கள், "பார்த்தால் போதுமா?" என்று கேட்கிறீர்கள். நாங்களோ, மஹான்களின் இதயத்தில் நம்மைப்பற்றிய ஒரு எண்ணம் வந்தால் கூடப் போதும், அவர்களின்பால் க்ருபை சுரக்கும் என்று சொல்கிறோம்! மஹான்களின் இதயத்தில் நம் பொருட்டு சுரக்கும் அந்த க்ருபையினாலேயே நமக்கு பக்தி, ஞானம், வைராக்யம் எல்லாம் எளிதில் வந்துவிடும். சந்தேகமே வேண்டாம்!**

என்னுடைய ஆத்ம ஸகாவே,
ராதே! ராதே!

உன்னைப் பார்த்துப் பேசி வெகுநாட்கள் ஆகிவிட்டது. எப்படி இருக்கின்றாய்? ஶ்ரீமத் பாகவத பாராயணம், நாம ஜபம், பூஜை, கீர்த்தனம் இவைகளை எல்லாம் வழக்கம்போல் தொடர்ந்து செய்து வருகின்றாயா? உன் உடல்நலம், பக்தி செய்ய வேண்டிய அளவிற்கு, ஆரோக்கியத்துடன் இருக்கின்றதா? உடல் நலத்தைப் பேணும் விஷயத்தில் அலட்சியமாய் இருக்காதே. பகவானே பாகவதத்தில் ஏகாதச ஸ்கந்தத்தில் அழகாக இதை எடுத்துக் கூறுகின்றார். இந்த சரீரம் எடுத்ததே பகவானை அடைவதற்காகத்தான். நம்முடைய உடலிலிருந்து உயிரானது பிரிகின்ற காலத்தில் நாம் சாந்தமாகி, நிறைந்து, க்ருஷ்ண சரணத்தை அடையவேண்டும். அதுவரையில், சரீரம் நன்றாக இருக்கவேண்டும். தலைவலி, மூட்டுவலி, அடிக்கடி ஜ்வரம் போன்ற வியாதிகளை சம்பாதித்துக் கொண்டுவிடக் கூடாது. சரீரத்திற்கு அதிகமான உணவு தேவையல்ல. அதே சமயம் தேவையில்லாத உணவு ஆபத்தானது. ஆரோக்கியமான உணவே நல்லது. தியானம் செய்யும்பொழுது ஏற்படும் சரீரத் தொந்தரவுகளைச் சில ஆசனங்களால் சரி செய்துக் கொள்ளவேண்டும். மந்திரம், க்ரஹம், விஷ ஜந்துக்கள் இவற்றால் ஏற்படும் தொந்தரவுகளை மந்திரஜபம், உபவாசம், தெய்வபூஜை இவைகளால் போக்கிக் கொள்ளவேண்டும். மனதில் உள்ள வாசனைகளான காமம், கோபம், பொறாமை, போட்டி இவைகளெல்லாம் அவ்வளவு எளிதில் போகாது. அவை நம்மைவிட்டுப் போகவில்லையே என்று வருத்தப்படாதே. அது போவதற்குப் பல நாட்கள் ஆகும்.

ஶ்ரீமத் பாகவதத்தில் பகவான் உத்தவனிடம் சொல்கிறார்,

*பாத்ய மாநோபி மத்பக்தோ விஷயைர் அஜிதேந்த்ரிய: |*
*ப்ராய: ப்ரகல்பயா பக்த்யா விஷயைர் நாபி பூயதே ||*
(ஶ்ரீமத் பாகவதம் *11:14:18*)

இந்திரியங்களை வெற்றிகொள்ள முடியாதபடி என் பக்தன் ஆரம்பத்தில் தவிப்பான். அவனுடைய பக்தியும் சத்தியமானது. அவன் காமம், குரோதம், காஞ்சனம், பாவம் இவைகளில் விழவும் செய்வான். தடுமாறுவான், தள்ளாடுவான்.



பிறகு, அவனே வருந்துவான். ஆனாலும் அவற்றில் பகவானிடம் பக்தியில்லாத காலத்தில் ஈடுபட்டதுபோல் அவன் இப்பொழுது ஈடுபடுவதில்லை. அதன் தீவிரம் குறைந்துவிடும். எவ்வளவுக் கெவ்வளவு அவன் நிறைய நாமஸங்கீர்த்தனம் செய்கின்றானோ, எவ்வளவுக் கெவ்வளவு என் கதைகளைக் கேட்டு பகவானின் குணங்களைச் சிந்திக்கின்றானோ, அந்த அளவுக்கு, அவன் இந்திரியங்களை (புலன்களை) வெல்வான். இவற்றையும் தாண்டி சில அருவெறுப்பான, இழிவான குணங்களும் அவனை ஜென்மாந்திர வாசனை பலத்தால் அடிக்கடி தொந்தரவு செய்யும். இவை அடிக்கடி அவனை நிலைகுலையச் செய்யும். குலைந்துபோய் விடுவான். இவற்றிலிருந்து வெளிவர வேண்டுமானால், அவன் பகவானைப் பார்த்த பாகவதோத்தமர்களின் அருகில் வசித்து, அவர்களுக்கு சேவை செய்ய வேண்டும். அப்படி அவன் சேவை செய்து வருவதால், அத்தகைய இழிவான செயல்கள் அவனைவிட்டு விலகும்.

இந்த ஸம்ஸாரக்கடலை முழுவதுமாகத் தாண்டுவது என்பது ஒரு எளிய விஷயமல்ல. பொறுமையுடன் சாதனைகளைச் செய்துவா.

*யன் நாமாக்ரிதிபிர் க்ராஹ்யம் பஞ்சவர்நம் அபாதிதம்|*
*வ்யார்த்தேன அபி அர்த்தவாதோயம் த்வயம் பண்டித மானிநாம்||*
*யோகிநோபக்வ யோகஸ்ய யுஞ்சத காய உத்தித்தைஹி|*
*உபசர்கைர் விஹன்யேத தத்ராயம் விஹிதோ விதிஹி||*
*யோகதாரணயா காம்ஸ்சித் ஆசனைற் தாரணாந்விதைஹி|*
*தபோ மந்த்ரௌசதைஹி காம்ஸ்சித் உபசர்கான் வினிற்தஹேத்||*
*காம்ஸ்சின் மாமானுத்யாயென நாம சங்கீர்த்தனாதிபிஹி|*
*யோகேஸ்வரானுவ்ருத்யா வா ஹன்யாத் அசுபதான் சனைஹி||*
(ஸ்ரீமத் பாகவதம் *11:28:37-40*)

ஸாரத்தைத்தான் உனக்கு எழுதியுள்ளேன். என்னவோ உன்னோடு இவைகளைப் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்று தோன்றியதால் எழுதியுள்ளேன். வேறு யாருடன் இவைகளை நான் பகிர்ந்து கொள்ளமுடியும்? பகவானையே நினைத்து பகவானுக்காகவே வாழும் உன்னை, உலகம் முட்டாள் என்றும், சாமர்த்தியம் இல்லாதவன் என்றும் இப்பொழுது சொல்லும், கவலைப்படாதே! மரணத்திற்குப் பிறகு யார் முட்டாள்? யார் சாமர்த்தியம் இல்லாதவர்கள்? என்பதை அவரவர்களே புரிந்துகொள்வார்கள்.

**-M.K.ராமனுஜம்**



# நாமம் ஒன்றே போதுமே

ஒரு நாள் மாலை நேரத்தில் ஸத்சங்கத்தில் ஓர் அன்பர் ஆசனம் போட்டுக் கொண்டு கண்களை மூடி ஏதோ செய்து கொண்டிருந்தார். அப்போது ஸ்ரீ ஸ்வாமிஜி ஸத்சங்க பவனத்தில் பிரவேசித்தார். ஸ்ரீ ஸ்வாமிஜி வந்ததை உணர்ந்த அந்த அன்பர் உடனே எழுந்து ஸ்ரீ ஸ்வாமிஜியை நமஸ்கரித்தார். ஸ்ரீ ஸ்வாமிஜி கனிவாக அவரைப் பார்த்து, “என்ன செய்து கொண்டிருக்கிறாய்?” என்று வினவினார்.

“நானா ஸ்வாமிஜி? மனதை அடக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்”, என்றார் அவர்.

“நீ பக்தி மார்கத்தைத் தானே பின்பற்றுகிறாய்? பிறகு ஏன் இப்படிச் செய்கிறாய்?”, என்றார் ஸ்ரீ ஸ்வாமிஜி.

“ஸ்ரீ ஸ்வாமிஜி அனுமதித்தால் நான் ஒரு கேள்வி கேட்கலாமா?”, என்றார் அவர்.

ஸ்ரீ ஸ்வாமிஜி ஆமோதித்துத் தலையசைத்ததும் அந்த பக்தர், “பக்தி மார்கத்தில் சென்றால் மட்டும் மனது அடங்க வேண்டாமா?” என்றார்.

“பக்தி மார்கத்தில் சென்றாலும் அவசியம் மனது அடங்கத்தான் வேண்டும்” என்றார் ஸ்ரீ ஸ்வாமிஜி.

“பிறகு ஏன் என்னை நீங்கள் மனதை அடக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டாம் என்கிறீர்கள்?” என்று அந்த பக்தர் கேட்க, ஸ்ரீ ஸ்வாமிஜி அழகாக பதிலுரைத்தார்.

“பக்தி மார்கத்தில் சென்றாலும் மனது அடங்கத்தான் வேண்டும். ஆனால், நீ இப்படியெல்லாம் உட்கார்ந்துகொண்டு மனதை அடக்க முயற்சித்தால் அதற்கு யோகம் என்று பெயர். பக்தி மார்கத்தில் நிறைய கதை கேட்பதாலும், நாம கீர்த்தனம் செய்வதாலும் மனம் தானாக பகவானிடம் அடங்கவேண்டும். ஆக, கதா ஸ்ரவணத்தையும், நாம கீர்த்தனத்தையும் நீ அதிகரிக்கவேண்டுமே தவிர, இதுபோல் அப்யாசம் செய்யக்கூடாது” என்று முடித்தார்.

இதைக் கேட்ட அந்த அன்பர் சந்தேகம் தீர்ந்து தனது இடத்திற்குத் திரும்பும் வேளையிலேயே அவர்தம் நாவில் மஹாமந்திரம் ஒலிப்பதை உணர்ந்து சந்தோஷமடைந்தார் ஸ்ரீ ஸ்வாமிஜி.

நம் ஒவ்வொருவருக்கும் கடவுள் வழங்கியுள்ள மிகப்பெரிய பொக்கிஷம் வாழ்க்கை என்பதே! அதிலும், 84 லட்சம் வகையான ஜீவராசிகள் இருக்க, நமக்கு கிடைத்துள்ள மனிதப்பிறவியோ அரிதினும் அரிதானது என்று சொல்லாத சாஸ்திரங்கள் இல்லை. பாடாத அடியார்களும் இல்லை.

இந்த மனிதப்பிறவிதான், அனைத்துப் பிறவிகளையும்விட ஏற்றம் வாய்ந்தது என்று சொல்லப்படுவது, நாம் மனிதர்களாகப் பிறந்துவிட்டோம் என்ற பாரபட்சத்தால் அன்று. தங்கள் நலனை மட்டுமே கருத்தாகக் கொண்டு செயல்படும் சராசரி மனிதர்கள், மனிதப்பிறவிதான் தலைசிறந்தது என்று சொன்னால், நாமும் அதை பாரபட்சம் என்று சந்தேகிக்கலாம். எவ்வித பட்சபாதமோ, துளியளவு சுயநலமோ அற்ற இறை அடியார்களும், சாஸ்திரங்களும் மனிதப்பிறவியின் மகத்துவத்தைச் சொல்லும்பொழுது, அதுதான் உண்மை என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது. அப்படி என்ன இதற்கொரு ஏற்றம்? என்று உங்கள் மனதில் ஒரு எண்ண ஓட்டம் எழுவது புரிகின்றது.

நாம் எதற்காகப் பிறவி எடுத்தோமோ அதன் பயனான இறை தரிசனத்தை அல்லது முக்தி நிலையை அடையும் வாய்ப்பு கிடைப்பது இந்த மனிதப் பிறவியில்தான். இந்த வாழ்க்கை என்பதே ஒரு வியக்கத்தக்க சுவாரஸ்யமான ஒரு பயணம். மனித உடல் தாங்கி நாம் பிறந்த நொடி முதல், இந்த உடலை துறக்கும் இறுதி நொடி வரை பல்வேறு இனிமைகளும் கசப்புகளும், வெற்றிகளும் தோல்விகளும், சாதனைகளும் ஏமாற்றங்களும், சந்தோஷங்களும் துக்கங்களும், பாராட்டுகளும் அவமானங்களும் கலந்த ஒரு பாதையே இந்த வாழ்க்கை.

# சுழற்சியிலிருந்து விடுபடுவோம்



அயல்நாட்டு பக்தர் ஒருவருக்கு
ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அளித்த
உபதேசத்தின் தமிழாக்கம்
- ***Dr*** ஆ பாக்யநாதன்

இதன் நோக்கமோ, அந்த பேரானந்த முக்தி நிலை என்று சொல்லப்பட்டபோதும், அதை நோக்கி மனிதர்கள் அனைவரும் ஒருமுகப்பட்டு பயணம் செய்கின்றார்களா? என்றால், அப்படியும் சொல்லிவிட முடியவில்லை. கணக்கில் அடங்காத படிகள் ஏறித்தான் உச்சத்தில் உள்ள அந்த அரியணையில் அமர வேண்டியுள்ளது. முதல் படியை ஏறத்தொடங்கிவிட்டால் கூட, நாம் சரியான வழியில்தான் முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம் என்று சந்தோஷப்பட்டாலும், ஒவ்வொரு படியையும் ஏறி தாண்டி மேலே செல்வதற்குள், அதில் பல சிரமங்களும் போராட்டங்களும் சிக்கல்களும் வழுக்கல்களும் உண்டு என்பதை நாம் பார்க்கத்தானே செய்கின்றோம்!

முதலில், எல்லோரும் கடைபிடிக்கவேண்டிய பொதுவான நோக்கங்கள் என்னவாக இருக்கவேண்டும்? பிறருக்கு தீங்கு இழைக்காமலும், தனிப்பட்ட மனிதனுடைய வாழ்க்கையையும் சமுதாயத்தையும் பாதிக்கும் தீய பழக்கங்களை பழகாமல் இருப்பதும் மனித குலத்திற்கே பொதுவானது. சரி, “நான் தீமைகள் செய்யவில்லை. தீய பழக்கங்கள் பழகவில்லை” என்பதோடு நின்றுவிட்டால் மட்டும் போதுமா?

உலக வாழ்க்கையில் உழன்றுகொண்டு, கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று மனம் போன போக்கில் வாழ்க்கையை வாழ்ந்துகொண்டு இருக்கும் ஒருவர், “எனக்கு உலக வாழ்க்கையும், அதில் உள்ள கேளிக்கைகளும் மிகவும் பிடிக்கும். குடும்பம், சுற்றம், நண்பர்கள் இவர்களோடு பொழுதுபோக்கு, விளையாட்டு, சினிமா, TV, சுற்றுப் பயணங்கள் என்று நான் சந்தோஷமாக இருக்கின்றேன். நான் எந்த தீய பழக்கங்களுக்கும் அடிமையும் இல்லை. யாருக்கும் எந்த தீமையும் இழைப்பதும் இல்லை. இன்னும் ஒரு படி மேலே சொல்லவேண்டும் என்றால், பிறருக்கு என்னால் முடிந்தவரை உதவுவதற்கும் நான் தவறுவதில்லை. நான் இப்படியே சந்தோஷமாக இருந்துவிட்டு போய்விடுகின்றேனே!” என்று சொன்னால், அப்படியே இருந்துவிடலாம், தவறில்லை!

ஆனால், நாம் இந்த வாழ்க்கையை வாழும் ஒவ்வொரு நொடிப்பொழுதும், நாம் ஈடுபடும் அனைத்து விஷயங்களும் ‘கர்ம’ சுமையாகப் பெருகி, நம்மை இதோடு விட்டுவிடாமல், தொடர்ந்து அடுத்த அடுத்த பிறவிகளில் கொண்டு விட்டுவிடுமே! மீண்டும் பிறந்து, மீண்டும் இறந்து இன்னும் எத்தனை முறை இந்தச் சுழற்சியில் சுற்றிக்கொண்டிருப்பது? ஏற்கனவே பலகோடி முறை இதில் சுற்றித்தானே, இறை அருளால் கிடைத்தற்கரிய இந்த மனிதப்பிறவியை பெற்றுள்ளோம்! அதனால், கடவுளை உணர்ந்து, இந்தப் பிறவியை நிறைவிற்கு கொண்டு வந்துவிட வேண்டும் என்ற எண்ணம்

தோன்றும் போதுதான் அடுத்தபடியான ஆன்மீக வாழ்க்கையில் அடி எடுத்து வைக்கின்றோம்.

முதன்முதலில், நம்மில் பெரும்பாலோர் கடவுளை எப்பொழுது சந்திக்கின்றோம் தெரியுமா? பள்ளிப்பருவத்தில் பரிட்சை எழுதும் முன்பாக, பரிட்சை முடிந்து அதன் முடிவுகள் வெளியாகும் தினத்தன்று, நமக்கு மிக நெருங்கிய ஒருவர் மருத்துவமனையில் சிகிச்சை பெறும்பொழுது, வேலை கிடைக்க interview செல்லும் தினத்தன்று, ஜோதிடர் நமக்கோ நம்மைச் சார்ந்தவர்களுக்கோ கண்டங்கள் உள்ளன என்று அச்சுறுத்திய நாள் அன்று, இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்... சுருங்கச் சொல்லவேண்டும் என்றால், கடவுள் என்பவர் நமது துயரங்களை நீக்குபவராகவும், நமக்கு வேண்டியவற்றைக் கொடுப்பவராகவும் நாம் அவரை நெருங்குகின்றோம்.

அப்பொழுது, நாம் வேண்டியவைகள் நிறைவேறாமல் போனால், நாம் கடவுளிடம் கோபம் கொள்கின்றோம். அவரை மறுத்தும் விடுகின்றோம். ஆனால், கருணையே வடிவான கடவுளோ, எவ்விதத்திலாவது அவரை அண்டிவிட்ட நம்மை, மேலும், தம்முடன் நெருக்கமாக வைத்துக்கொள்ள விரும்பி, பல படிகள் நம்மை உயர்த்தி, நமக்கு சத்சங்கத்தையும் குருநாதரையும் அருளுகின்றார்.

மெல்ல மெல்ல ஆன்மீக சாதனை, தியானம், யோகம், பக்தி, முக்தி போன்ற விஷயங்கள் நம் காதின் வழியே புகுந்து, லேசாக மனதை வருடத் துவங்குகின்றது. உலக வாழ்க்கையின் சிற்றின்பங்களில் சாரம் ஒன்றும் இல்லை என்று உணர்ந்து, இதைத் துறந்து, தீவிரமான ஆன்மீக சாதனைகள் பயிலவும் முனைகின்றோம். சிலர், அதையும் தாண்டி, துறவு வாழ்க்கையையும் மேற்கொள்கின்றனர். சரி! உலக வாழ்க்கையில் சிற்றின்பங்களில் மாட்டிக்கொள்ளாமல் ஆன்மீக வாழ்க்கையில் ஈடுபடத் துவங்கிவிட்டோம். இதற்குமேல் இதில் என்ன ஆபத்து இருக்கபோகின்றது? நாம் வேறு எதில் மாட்டிக்கொள்ளப் போகின்றோம் என்று ஒரு நொடி இறுமாப்புடன் சிரித்த மறுகணமே, ஆன்மீக சாதகனுக்கு, "இதுவரை கடந்து வந்தது ஒன்றுமே இல்லை. ஆன்மீக வாழ்க்கையில் சறுக்கல்கள் ஏராளம்" என்பது நிதர்சனமாகின்றது.

ஒரு ஊரில், ஒரு அருமையான மனிதர் இருந்தார். நன்கு படித்து, பட்டம் பெற்று, தர்மமான வாழ்க்கை வாழ்ந்து, செல்வச் செழிப்புடனும், புகழுடனும் பல பதவிகள் வகித்து, பார்ப்போர் பொறாமை கொள்ளும் வண்ணம் அருமையான இல்வாழ்க்கையில் ஈடுபட்டு, முற்றிலும் உணர்ந்த ஞானியான குருவை அடைந்து, விவேகத்துடன் உலகத்தை துறந்து, தவ வாழ்க்கையில் ஈடுபட்டு வந்தார். பல வருடங்கள் அருந்தவம் இயற்றி, கடுகளவு கூட சுகபோகங்களுக்குத் தம்

உடலை அடிமையாக்கிக் கொள்ளாமல், கண்டவர் அனைவரும் வியக்கும் வண்ணம் துறவு வாழ்க்கையை மேற்கொண்டார்.

ஒரு நாள், அந்த ஊருக்கு மற்றொரு ஸ்வாமிகள், பக்தர்கள் புடைசூழ சகல பரிவாரங்களோடு வந்து சேர்ந்தார். அவருடன் வந்த வெள்ளி சிம்மாசனம், சத்ரம், சாமரம், குடை போன்ற உபசாரங்களை என்னவென்று வர்ணிப்பது. அந்த பக்கமாக நடந்து சென்ற துறவிக்கு ஒரு அரை நொடி மனதில், ‘‘நாமும் துறவிதானே! நம்மை இப்படி யாரும் கொண்டாடவில்லையே’’ என்ற எண்ணம் உதித்து, அவர் சஞ்சலப்பட்ட மறுகணமே, மனதில் அடுத்த எண்ணம், ‘‘இவற்றினால் என்ன பயன், எல்லாவற்றையும் துறந்துவிட்டு, வெறும் தர்பாசனத்தில் எளிமையாக நான் இருப்பதுதானே பெரிய விஷயம்’’ என்ற எண்ணம் வந்து அவருக்கு அகமகிழ்ச்சியையும் கொடுத்தது.

சிறிது நேரம் கழித்து மூன்றாவதாக, உள்ளிருந்து, அவரது குருவின் குரல் சிரித்துக்கொண்டே அவரிடம் பின்வருமாறு கேட்டது. ’’நன்றாக இருக்கின்றது உனது துறவும் அதன் எளிமையும்’’, ‘‘நமக்கும் இந்த உபசாரங்கள் கிடைக்கவில்லையே! என்ற அரை நொடி தாபமும் ஒரு ஆசைதானே! அந்தத் துறவி வெள்ளி சிம்மாசனத்தில் அமர்ந்திருக்க நானோ எளிமையாக தர்பாசனத்தில் அமர்ந்திருக்கின்றேன் என்று சந்தோஷப்படுவதும் ஒருவிதத்தில் பெருமைக்கு ஆசைபடுவதுதானே!’’ என்று.

நம் சாது, வெட்கித் தலை குனிந்தார். உலக வாழ்க்கையைக் கடந்து ஆன்மீக வாழ்க்கையில் பல படிகளைத் தாண்டி முன்னேறிவிட்ட பொழுதும், இறுதி இலக்கை அடைவது அவ்வளவு சுலபமல்ல என்று குருநாதர் உணர்த்தியதை எண்ணி வெட்கித் தலை குனிந்தார்.

இது ஒருபுறம் இருக்க, சத்சங்கத்தை அடைந்து, இதிகாச புராணங்கள், அடியார்களுடைய கீர்த்தனங்கள் போன்றவற்றில் சிறிது சிறிதாக பரிச்சயம் ஏற்படுவதில், தீவிர ஆன்மசாதகனுக்கு மற்றொரு ஆபத்தும் உள்ளது. உதாரணத்திற்கு, அதுவரை நமது பாரம்பரியமான சங்கீதத்தையும் அதன் ஒப்பற்ற இனிமையையும் அறிந்திராத அன்பர் ஒருவர், ஒரு சமயம், தியாகராஜ ஸ்வாமிகளின் கீர்த்தனங்களை சத்சங்கத்தில் கேட்க நேர்ந்தது. குருநாதரை வழிகாட்டியாகக் கொண்டு, தீவிர சாதனைகள் புரிந்து இறைவனை தரிசிக்கவேண்டும் என்பதுதான் அவர் சத்சங்கத்திற்கு வந்ததன் நோக்கம். தியாகராஜ ஸ்வாமிகளின் கீர்த்தனங்களிலேயே மனதை பறிகொடுத்துவிட்ட அவர், அதைப்பற்றி

மேலும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலால் தூண்டப்பட்டு, பல வருடங்களுக்கு முன் அதில் இறங்கினார். அதில் இறங்கியவருக்கு, பிறகு தான் புரிந்தது அது ஒரு ஆழம் காண முடியாத கடல் என்று. இன்று வரை, அந்த கடலின் ஆழத்தை காணவேண்டும் என்று அந்த அருமையான நண்பர், கர்நாடக இசை வகுப்புகளுக்கும், தெலுங்கு மொழி வகுப்புகளுக்கும் சென்ற வண்ணம் இருக்கின்றார். அதில் கரையும் கண்டபாடில்லை. தியாகராஜ ஸ்வாமிகள், தன் ஸாஹித்யங்கள் மூலம் எடுத்துரைத்த சாரமான ராம நாமத்தையும் ஜபம் செய்தபாடில்லை. அது, அவரது குற்றம் அல்ல. அந்த விஷயத்தில் உள்ள அழகும், ஈர்ப்பும் அப்பேற்பட்டது. ஏனென்றால், அதில் தெய்வத்தன்மை உள்ளடங்கி இருக்கின்றது. இது, நமது சனாதன தர்மத்தில் உள்ள ஒவ்வொரு விஷயத்திற்கும் கலைகளுக்கும் பொருந்தும்.

வேதங்கள் ஆகட்டும், சாஸ்திரங்கள் ஆகட்டும், உபநிஷத் ஆகட்டும், பாரம்பரிய இசை ஆகட்டும், பாரம்பரிய நாட்டியம் ஆகட்டும், தேனினும் இனிய நமது தமிழ் மொழியாக இருக்கட்டும்... ஒவ்வொன்றிலும் இறங்கியவர்கள், அவற்றின் ஆழத்தைக் காண பல பிறவிகள் எடுத்தாலும் அவற்றின் ஆழத்தை காண முடியாது என்று உணர்ந்ததுதான் மிச்சம். அதுவே, நமது பாரம்பரிய பொக்கிஷங்களின் பெருமை! அந்தந்தத் துறைகளுக்காகவும் கலைகளுக்காகவும் தங்கள் வாழ்க்கையையே அர்பணித்துக்கொண்டு, அதை மட்டுமே லட்சியமாக கொண்டுள்ளவர்களுக்கு அது தகும்.

ஆனால், மனிதப் பிறவி எடுத்ததனுடைய லட்சியமான முக்தியை மட்டுமே அடைய வேண்டும் என்று குறிக்கோளாகக் கொண்டு, உலக விஷயங்களை துறந்துவிட்ட ஆன்மீக சாதகர்கள், அளவை மிஞ்சி, இது போன்ற அருமையான விஷயங்களில் ஈடுபடாமல், குருவின் உபதேசத்தை மட்டுமே ஒருமுகமாக கொண்டு இருத்தலே அவசியம். அந்த ஒருமுகப்பட்ட முயற்சியே அவர்களை இறுதிப் படிகட்டில் உள்ள அரியணையான முக்தி நிலையில் கொண்டு அமர்த்தும்.

## ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் பொன்மொழிகள்

உடலை அசைத்துச் செய்யும் தெய்வீக சாதனைகள் பிராணனைக் கட்டுப்படுத்த வேண்டும். பிராணன் கட்டுப்பட்டால், மனது ஒருமுகமாகும். மனது ஒருமுகமானால், அறிவு பிரகாசமாகும். அறிவு பிரகாசமானால் ஆனந்தம் விளையும்.



# பக்தி சுகந்தம்

ஸ்ரீ ராமானுஜம்ஜி

அது போல, பக்தி செய்கையில் பக்தியினால் வரும், வரப்போகும் மகிழ்விற்காகச் செய்கிறேன் என்பதும் அங்கு இல்லை. மகிழ்ச்சியால் செய்வது; செய்வதாலேயே மகிழ்ச்சி. மகிழ்ச்சி அப்புறம் என்றில்லை. பக்தியால், எப்பொழுதும் மகிழ்ச்சி. இதுதான் பக்தனின் நிலை. பக்திதான் அவனுக்கு சுகம். வேறு தனியான ஒன்று அப்புறம் வரப் போவதில்லை.

ஆனாலும், ரசித்து ரசித்து உண்பதாலோ, உடுப்பதாலோ அந்தந்தக் காரியத்தின் உத்தேசமான பசி விலகுவது, சரீரத்தை மறைப்பது என்பதோடு நில்லாமல் சரீரம் பலம் பெறுவது, பாதுகாப்பு தருவது என்ற மற்ற விஷயங்களும் நடந்து விடுகின்றது அல்லவா? ஆனால், இது உபரி பலன்! இதற்காக செய்யவில்லை. ஆனால், அதுவும் நடந்து விடுகிறது. அப்படியே பக்தியினால் ஆன்மீக முன்னேற்றமும் முக்தியும் சாத்யமாகிறது. ஆனால், ஆன்மீக முன்னேற்றத்திற்காகவோ முக்திக்காகவோ பக்தி செய்யப்படுவதில்லை. அது, உள்நோக்கம் எனினும் அது உபரியாகக் கிடைத்து விடுகிறது என்பதுதான் உண்மை. ஆக, முக்திக்காக பக்தி செய்கிறேன் எனும் எதிர்பார்ப்பு பக்தி செய்கையில் இருக்க முடியாது. (இருந்தால் அது பக்தி ஆகாது. பக்தியில் வேறு நினைவில்லை. தன் ஸ்வாமியைக் கொஞ்சி மகிழ்வதைத் தவிர வேறு நினைவு ஒழிந்த நிலையே அதுவாம்).

ப்ருந்தாவன யாத்திரை மேற்கொள்கிறோம். நல்ல கிருஷ்ண தரிசனம். திரும்பி வந்த பின், வழக்கமான ஏதோ வாழ்க்கைப் பிரச்னை. உன் தலத்திற்கு யாத்திரை செய்து, உன்னைப் பார்த்து விட்டு வந்த பின், இப்படிப் பிரச்சனை வரலாமா? என்று கேட்பது எப்படி ரசிகனின் உள்ளம் ஆகும்? சிங்கப்பூர் போன்று ஏதாவது இடத்திற்கு சுற்றுலா சென்று விட்டு வந்து, இப்படி எல்லாம் நினைக்கிறோமா? அது தனி, இது தனி அல்லவா?

ஒருவரை மிகவும் பிடித்துப் போனால், அவரைப் பற்றி நிறையத் தெரிந்து கொள்ள ஆர்வம் வருகிறது. அவர் எங்கெங்கெல்லாம் என்னென்ன செய்தார் என்று நேரில் பார்க்க ஆசை ஏற்படுகிறது. அவர் பால்யத்தில் எங்கிருந்தார்; அந்த இடங்களை எல்லாம் பார்க்க ஆசைப்படுகிறோமல்லவா? அப்படித்தான் கிருஷ்ணனை யாருக்குப் பிடிக்கிறதோ அவர்கள் யாத்திரை செய்கிறார்கள். யாத்ரையின் நோக்கம் பார்த்து மகிழ்வதே அன்றி வேறு ஒன்றுமில்லை. இதுதான் பக்தியினால் வரும் சுகம். அதாவது பக்தியைச் சுகத்திற்காக செய்யப்படுவதே சுகமாகும்.

பெரிய பக்தர்கள் பக்தியை சுகத்திற்காக செய்தனரே ஒழிய, பக்தியின் ப்ரயோஜனத்திற்காக இல்லை. சுகர், மீரா, தியாகராஜர் எல்லாம் பாடி, எழுதி, பேசி, ஆடியது எல்லாம் பக்தி சுகத்தினால் தான் அப்படி எல்லாம் செய்தார்கள்.

பக்தியினால் ஏற்படும் பலனிற்காக (ப்ரயோஜனத்திற்காக) ஒருவன் பக்தி செய்யப் போனால், அவனுக்கு கேட்டது கிடைக்காத பொழுது பக்தி செய்வதை விட்டு விடுவான். பக்தியைச் சுகத்திற்காக செய்பவனோ என்ன ஆனாலும் அந்த பக்தி சுகத்தைத் தேடுவான். அதனால், பக்தி செய்து கொண்டே இருப்பான். மூச்சு விடுவதை நிறுத்த முடியாதது போல், அவனும் பக்தி செய்து கொண்டே இருப்பான். அவன் வாழ்வில் பக்தி ஒன்றாகி இணைந்து விடும். பக்தியை நிறுத்துவது என்ற பேச்சுக்கே அங்கு இடமில்லை. பக்தியினாலேயே காரியங்கள் எல்லாம் அவன் செய்வான். ஏனெனில், அதுதான் அவனுக்கு சுகமாக இருக்கும்.

அப்படி வாழ்ந்த மகான்கள் பக்தி ரசம் ததும்பும் நூல்களை அருளி இருக்கின்றனர். அந்த நூல்களால் பயன் என்ன?

நல்ல சமையல்காரனுக்கு, பல வகையான உணவுப் பதார்த்தங்களைப் பற்றிய புத்தகம் உதவும்தானே? அப்படித்தானே அலங்கார ஆடைகளைப் பற்றிய புத்தகம் ஒரு ஒப்பனை கலைஞனுக்கு உதவும்? அப்படியே, இந்த பக்தி ரசம் பற்றிய நூல்கள் நம்மை பக்தி வழியில் செம்மைப்படுத்தி, பக்தியை மேலும் ருசிக்கச் செய்கின்றன.

தொடர்ந்து சில நொடிகள் அமைதியாக இருந்த குருநாதர், உனக்கு இப்பொழுது பக்தியின் சுகத்திற்கும் ப்ரயோஜனத்திற்கும் வேறுபாடு தெரிந்ததா? என்றார்கள்.

முன்னிருந்தோர் அனைவரும் ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஆழ்ந்த விளக்கத்தையும், அவர் வசனத்தையும் கேட்டு, அங்கீகரித்துத் தலை அசைத்தனர். அவர் சொன்ன விஷயங்கள் வாழ்நாள் முழுவதும் மறக்கும்படியானதல்லவே! அதிலேயே அன்பர்கள் மூழ்கி இருந்து கொண்டிருக்கையிலேயே, ஸ்ரீ ஸ்வாமிஜி டோலோத்சவத்திற்காக எழுந்தார்கள்.

...தொடரும்

# பாலகர்களுக்கு ஒரு கதை

மகாபாரதம்தான் இதிகாசங்களில் மிகவும் பெரியது. அதில் நம்முடைய அன்றாட வாழ்க்கைக்குப் பயன் தரக்கூடிய விஷயங்களைச் சிற்சிறு கதைகளாக நிறையச் சொல்லியிருக்கிறார்கள். அதில் ஒரு கதை இதோ!

ப்ரமதத்தா என்ற மஹாராஜா வாழ்ந்து வந்தார். அவரது அரண்மனையில் ஒரு அறையின் மூலையில், ஒரு புத்திசாலியானக் குருவி கூடு கட்டி வாழ்ந்து வந்தது. அந்தக் குருவிக்கு ஒரு குஞ்சு பிறந்த அதே நாளில், ராஜாவிற்கும் ஒரு ராஜகுமாரன் பிறந்தான். அந்தக் குஞ்சுக் குருவியும் ராஜகுமாரனும் ஒன்றாக வளர்ந்தனர். தாய்க்குருவி கடற்கரைக்குப் பறந்து சென்றுவிட்டு வீடு திரும்பும்பொழுதெல்லாம், மிக அரிதான பழவகைகளைக் கொண்டு வரும். எப்பொழுது பழம் எடுத்து வந்தாலும் தன் குழந்தைக்கு ஒன்று, ராஜகுமாரனுக்கு ஒன்று என்று இரண்டாகக் கொண்டு வரும். அத்தகைய மனப்பக்குவம் அந்தத் தாய்க்குருவிக்கு இருந்தது. அதற்குத் தன்னுடைய குஞ்சையும், ராஜகுமாரனையும் பிரித்துப் பார்ப்பதற்கு ஒரு காரணமும் தோன்றவில்லை.

ஒருநாள் தாய்க்குருவி இரண்டு பழங்களை எடுத்துக் கொண்டு வீடு திரும்பும்பொழுது, அதன் செல்லமான குழந்தை தரையில் உயிரிழந்துக் கிடந்தது. இதைக் கண்டு மிகவும் அதிர்ச்சியடைந்த தாய்க்குருவி ராஜகுமாரன்தான் தன் குழந்தையின் கழுத்தை நெறித்துக் கொன்றுவிட்டான் என்று தெரிந்துகொண்டது. ராஜகுமாரன்மேல் குருவிக்கு மிகுந்த கோபம் வந்தது. ராஜவம்சத்திடமிருந்து ஒரு தூய்மையான நட்பை எதிர்ப் பார்த்தது



தன்னுடைய தவறுதான் என்று அதற்குத் தோன்றியது. ‘இந்த கோரமான செயலைச் செய்த ராஜகுமாரன் சிறிதளவுகூட நன்றியுணர்வு இல்லாதவன். அவனுக்கு ஒரு பாடம் கற்பிக்கவேண்டும்’, என்று முடிவு செய்தது. ‘என் குழந்தையும் இந்த ராஜகுமாரனும் ஒரே நாளில் பிறந்தனர். என் குழந்தையோ அவனை முழுமையாக நம்பியது. இருந்தாலும் இரக்கமின்றி ராஜகுமாரன் என் குழந்தையைக் கொன்று விட்டான். இந்தச் செயலுக்கு அவன் தண்டனையை அனுபவிக்கட்டும்’ என்று நினைத்துக் கொண்டு தன் அலகால் ராஜகுமாரனின் கண்களைக் கொத்தியது.

தற்செயலாக மஹாராஜா தாய்க்குருவியின் இந்தச் செயலைப் பார்த்துவிட்டார். மகாராஜாவிடம் தாய்க்குருவி, “ஒருவன் தான் செய்த தீய செயலுக்கு, தண்டனையை அனுபவித்தே ஆகவேண்டும். அவன் அனுபவிக்காவிட்டால் அந்தப் பாவம் அவன் வம்சத்தைப் போய்ச் சேரும்”, என்று சொன்னது. மகாராஜாவிற்கு நடந்த சம்பவம் புரிந்துவிட்டது. சிறிது நேரம் சிந்தித்துவிட்டு, ‘ராஜகுமாரன் உன் குழந்தையைக் கொன்றதற்கு நீ அவனுக்குத் தண்டனையை அளித்துவிட்டாய். கணக்கு தீர்ந்துவிட்டது. நீ இதே இடத்தில் வாழ்வாயாக. நாம் நமது இயல்பு வாழ்க்கையைத் தொடரலாம்”, என்றார்.

தாய்க்குருவியோ மகாராஜாவின் இந்த உத்தரவை ஏற்க மறுத்தது. “நான் பிரதி தண்டனை கொடுத்திருந்தாலும், உங்களைப் பொறுத்தவரை நான் செய்தது ஒரு மன்னிக்க முடியாத குற்றமேயாகும். இத்தகைய சம்பவம் நடந்ததற்குப் பின்பும், உங்களிடமிருந்து நம்பிக்கையை எதிர்பார்ப்பது மடமையே ஆகும். விரோதம் வந்துவிட்ட இடத்தில், கனிவான சொற்கள் பேசப்பட்டிருந்தாலும், அவ்விடத்தில் விசுவாசத்தையும் நட்பையும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பது அழிவிலேயே முடியும். உறவினர்கள் மத்தியில் பெற்றோரை மட்டும்தான் நம்பலாம். பேராசையினால் ஒரு சகோதரன்கூட பகைவனாகிவிடுகிறான். செல்வம் இருக்கும்வரைதான் நண்பர்கள் உடனிருப்பார்கள். அதனால், இன்பமும் துன்பமும் காலத்தினால் நிர்ணயிக்கப்படும். நாம் இருவரும் நடந்த சம்பவத்தை மறக்கப் போவதில்லை. அதனால் நான் இங்கேயே இருப்பது நல்லதல்ல”, என்று கூறிற்று.

இதைக் கேட்ட மகாராஜா, “இந்தச் சம்பவம் நம்மிருவருக்கும் இடையே எந்த விரோதத்தையும் காண்பிக்கவில்லை. நடந்த சம்பவம் காலத்தின் தோஷம். பிறப்பும் இறப்பும் நிர்ணயிக்கப்பட்டது. அதே காலம், இதன் தாக்கத்தை மறக்கவும் செய்துவிடும்”, என்றார்.

“நான் இதை ஏற்றுக்கொள்ள மாட்டேன். காலம்தான் எல்லாவற்றுக்குமே காரணம் என்றால், ஒரு உறவினர் இறக்கும்பொழுது நாம் ஏன் வருந்தவேண்டும்? ஒரு மருத்துவர் பலரின் வியாதிகளை ஏன் குணப்படுத்தவேண்டும்? பாவம், புண்ணியம் என்ற பேச்சுக்கே இடமிருக்காது. இதைச் சிந்தித்துப் பார்க்கும்போது, காலம்தான் எல்லாவற்றிற்கும் காரணம் என்று சொல்லிவிட முடியாது என்று புரிய வருகின்றது. நல்லதோ, கெட்டதோ மனிதனின் முயற்சியை நடத்திச் செல்வதும், தடுப்பதும் காலம்தான். ஆனால், செயலோ மனிதன் செய்ததேயாகும். ஒருவனுக்கு வாழ்க்கையில் மிகப் பெரிய துக்கம், தன் மகனை இழப்பதுதான். கண் பார்வை இல்லாத உன் மகனைப் பார்க்கும் பொழுதெல்லாம், உனக்கு என்மேல் ஆத்திரம் அதிகரித்துக்கொண்டே இருக்கும். சுக்ராசார்ய மகரிஷி, ‘நம்மால் துன்பத்திற்குள்ளான ஒருவனிடம் நம்பிக்கை வைப்பது மிகப்பெரிய குற்றம்’ என்று சொல்கிறார். தனக்கு மரியாதை இல்லாத நாட்டிலிருந்து ஒருவன் உடனடியாக வெளியேற வேண்டும். நம்பத்தக்கவர்களே நண்பர்களாவர். நம்மிடம் அன்பு காட்டுபவரே சிறந்த வாழ்க்கைத் துணை. நமக்கு அனுகூலமாக இருப்பவனே ஒரு நல்ல வாரிசு. நமக்கு எவ்விடத்தில் பாதுகாப்பு உள்ளதோ அதுவே நம் தாய்நாடு. இப்பொழுது இந்த இடம் எனக்குச் சரியானதல்ல. என்னையே நான் அழித்துக்கொள்ள விரும்பவில்லை”, என்று கூறிப் பறந்து சென்றது.

இந்தக் கதையிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் என்ன என்பது, உங்களுக்கே புரிந்திருக்கும். மேலும், இதில் ஒன்றை கவனமாகப் பார்க்க வேண்டும். நாம் யாருடன் நீண்டகாலம் வாழ்ந்தாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம் என்பதை மனதில் கொள்ளவேண்டும். உதாரணமாக, கணவன்-மனைவி, business partner, நல்ல நண்பர்கள், நமது (neighbours) அண்டை வீட்டுக்காரர்கள் போன்ற இவர்களுடன், எந்தக் கசப்பான அனுபவங்களும் ஏற்பட்டு விடாதபடி அழகாகத் (plan) திட்டமிட்டு, (channelising emotions properly) உணர்ச்சிகளை சரியான முறையில் கையாண்டு வாழப் பழகிக் கொள்ளவேண்டும் என்பதே அது.

- Dr ஜனனி

## ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் பொன்மொழிகள்


மஹாப்பிரபு போன்று வாழக்கூட வேண்டாம். அவர் காட்டிய பாதையில் நாமும் பயணத்தை ஆரம்பிக்கின்றோம் என்ற திருப்தியே போதுமானது.

ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபந்யாசம், அம்பத்தூர், G.K. ஷெட்டி விவேகானந்தா வித்யாலயா பள்ளி வளாகத்தில், 8 May




யோகிராம்சுரத்குமார் நாம ஆஸ்ரமம், கோவிந்தபுரம், 26 May





ஸ்ரீ சீதா கல்யாண உத்ஸவம்,
மதுரபுரி ஆஸ்ரமம், 12 May



ஸ்ரீ சீதா கல்யாண உத்ஸவம்,
மதுரபுரி ஆஸ்ரமம், 12 May








**ஏப்ரல் 27-30: உடுமலைபேட்டை GOD சத்சங்கம் ஏற்பாட்டில் ஸ்ரீ ராம ஐயர் கல்யாண மண்டபத்தில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அருளிய கலிதர்ம உந்தியார் - ஸ்ரீ பாக்யநாதன்ஜி அவர்களின் உபன்யாசம் நடைபெற்றது. தினமும் 300க்கும் மேற்பட்ட பக்தர்கள் இதில் கலந்துகொண்டனர்.**

# செய்திகள்

## ஸ்ரீமத் ராமானுஜாச்சார்யாரின் *1000*வது ஜயந்தி மஹோத்ஸவம்

**ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன், திருமால் அடிப்பொடி ஸ்ரீ பலராமன்ஜி அவர்கள் தலைமையில் ஸ்ரீமத் ராமானுஜரின் 1000வது ஜயந்தி மஹோத்ஸவம் GOD India Trust சார்பில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.**

- **ஏப்ரல் 9 - கர்நாடக மாநிலம், மேல்கோட்டையில், அகண்ட நாமாவும் நகரஸங்கீர்த்தனமும் நடைபெற்றது.**
- **மே 1 - ஸ்ரீபெரும்புதூர் நாமத்வார் பக்தர்களால் ஸ்ரீபெரும்புதூர் நாமத்வாரில் அகண்ட நாமாவும் அன்னதானமும் நடைபெற்றது. ஸ்ரீபெரும்புதூர் வீதிகளில் நகரஸங்கீர்த்தனம் நடைபெற்றது.**
- **மே 7 - ஸ்ரீபெரும்புதூர் மற்றும் கலெட்டிப்பேட்டை நாமத்வார் பக்தர்களால் திருக்கோஷ்டியூர் திவ்யக்ஷேத்திரத்தில் அகண்டநாமாவும் வீதிபஜனையும் நடைபெற்றது.**
- **ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் வேலூர் God Satsang சார்பில் வேலூர் அருகில் உள்ள பல்வேறு கிராமங்களில் கோயில்கள், பள்ளிகள், இல்லங்களில் மஹாமந்திர கீர்த்தனம் நடைபெற்றது**

## ஸ்ரீ ஸ்வாமிஜியின் முன்னிலையில் நடந்த சத்சங்கங்கள்

- **மே 2: சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீ பாண்டுரங்கன் கோயிலில் கும்பாபிஷேக பூர்த்தி ஸம்வத்ஸர அபிஷேக ஆராதனைகளில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்கள்.**
- **மே 5 - 8: சென்னை மேல மாம்பலம், ஸ்ரீ அயோத்யா அஸ்வமேத மஹாமண்டபத்தில் நடைபெற்ற Grand Bhajan Carnival - IX பஜனை மேளாவில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டார்கள்.**
- **மே 8: சென்னை, அம்பத்தூர், G.K. ஷெட்டி விவேகானந்தா வித்யாலயா பள்ளி வளாகத்தில், லக்ஷ்மீ நரஸிம்ஹ அனுக்ரஹா ட்ரஸ்ட் சார்பில் நடைபெற்ற வைபவங்களில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டு உபன்யாசம் நிகழ்த்தினார்கள்.**

# செய்திகள்

- மே 12: மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் ஸ்ரீ சீதா கல்யாண மஹோத்சவம் நடைபெற்றது. முத்துகுத்தல், பவ்வளிம்பு உத்ஸவமும் நடைபெற்றது.
- மே 9: நரசிம்ம ஜயந்தி - மதுரபுரி ஆஸ்ரமத்தில் நடைபெற்றது.
- மே 26: ரோஹிணீ நக்ஷத்திர ஸ்ரீ ஸத்குரு பாதுகா புறப்பாடு சேங்கனூர் ஸ்ரீ ப்ரேமிக ஜன்மஸ்தானில் நடைபெற்றது.

<u>சத்சங்கங்கள்:</u>

- ஏப்ரல் 22: மஹாரண்யம் ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸபெருமாள் வஸந்தகால பூச்சாத்து உத்ஸவம், புஷ்பங்கி ஸேவை கண்டருளினார்.
- ஏப்ரல் 24 - 30: பெங்களூரு அல்சூரில் பூர்ணிமாஜி, குமாரி ப்ரியங்கா, குமாரி காயத்ரி அவர்களால் ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹம் நடைபெற்றது.
- மே 2-11: வேலூர், காவேரிபாக்கம் அழகிய ராமர் கோயிலில் முரளிஜி அவர்களால் ஸ்ரீமத் ராமாயணம் உபன்யாசம் நடைபெற்றது. 400க்கும் மேற்பட்டவர்கள் இதில் கலந்துகொண்டனர்.
- மே 3 - 9 வரை: முடிகொண்டானில் பூர்ணிமாஜி, குமாரி காயத்ரீ, குமாரி ப்ரியங்கா அவர்களால் ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹம் நடைபெற்றது.
- மே 12-18: பெங்களூரு, அல்சூர் ஆஞ்சநேயர் திருக்கோயிலில் ஷிவ்கன்யா ஸ்ரீகன்யா சகோதரிகளால் ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ ப்ரவசனம் நடைபெற்றது.
- மே 15-21: ராஜபாளயத்தில், ப்ரஹ்மானந்த் ஸ்ரீ வேங்கடேஸ்வர ஆலயத்தில், குமாரி காயத்ரீ மற்றும் குமாரி ப்ரியங்கா அவர்களால் ஸ்ரீமத் பாகவத தசமஸ்கந்தம் - ஸ்ரீ க்ருஷ்ண லீலா ப்ரவசனம் நடைபெற்றது. நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இதில் கலந்துகொண்டனர். சத்சங்க பூர்த்தி அன்று காலையில் நகரஸங்கீர்த்தனமும் மாலையில் ருக்மிணீ கல்யாணம் ப்ரவசனமும் நடைபெற்றது.

# செய்திகள்

- மே 15 - 21: சென்னை, மயிலாப்பூர், சாலைத் தெரு, ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமி ஸந்நிதானத்தில் மாலை 6 மணி முதல் 8 மணி வரை ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ உபன்யாசம் நடைபெற்றது. இதில், ப்ரஹ்மஸ்ரீ பாலாஜி சர்மா, ஸ்ரீ ஸ்ரீதர், ஸ்ரீ ஸ்ரீநிவாஸன், ஸ்ரீ கபில வாசுதேவன், ஸ்ரீ ஸனத்குமார், ஸ்ரீ சிவகுமார், ஸ்ரீ ஹரி ஹர சுப்ரமணியன் ஆகியவர்கள் உபன்யாசம் செய்தார்கள்.
- மே 15 - 21: சென்னை, மேல மாம்பலம், ஸ்ரீ அயோத்யா அஸ்வமேத மஹாமண்டபத்தில் ஜனாபாய் ட்ரஸ்ட் சார்பில் ஸ்ரீ ஸ்ரீகாந்த் கௌண்டிண்யன் அவர்களால் ஸ்ரீ தியாகராஜ சரித்ரம் - ஸங்கீத உபன்யாசம் நடைபெற்றது.
- மே 22 - 28: திருச்சி நாமத்வாரில் ஆண்டு விழா வைபவம் ஒட்டி, முரளிஜி அவர்களால் ஸ்ரீமத் பாகவதம் ஏகாதசஸ்கந்தம் ப்ரவசனம் நடைபெற்றது.
- மே 22 - 28: மணிமங்கலம் ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி கோயில் ஸந்நிதியில் மாலை 7 மணி முதல் 8.30 மணி வரை பௌண்டரீகபுரம் ஸ்ரீ R. கேசவ சர்மா அவர்களால் ஸ்ரீ ராமானுஜ வைபவம் உபன்யாசம் நடைபெற்றது.
- மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயிலில் ஸ்ரீ ஸ்ரீதர ஐயாவாள் அன்னதானக்கூடத்தில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் ஆக்ஞையின் பேரில் பதினைந்து வருடங்களாக, தினமும், மதியம் 12 முதல் பகல் 1 மணி வரை அன்னதானமும் நீர்மோரும் வழங்கப்படுகிறது. சுமார் 150 முதல் 200 நபர்கள் வரை இதில் பயனடைந்து வருகின்றார்கள்.
- GOD USAவின் பத்தாவது ஆண்டை முன்னிட்டு, மதிப்பிற்குரிய, US Representative Congresswoman Ms Tulsi Gabbard மற்றும் Senator Ted Cruz அவர்கள் வாழ்த்து மற்றும் பாராட்டு மடல்களை GOD USA அன்பர்களிடம் வழங்கினார்கள்.

## Congress of the United States

A MESSAGE FROM

## U.S. REPRESENTATIVE TULSI GABBARD

IN RECOGNITION OF THE

## GLOBAL ORGANIZATION FOR DIVINITY

**UPON CELEBRATING 10 YEARS IN THE US**



---

*Aloha and Namaste,*

*A decade ago, the Global Organization for Divinity began sharing its important mission to promote peace, harmony, and brotherhood here in the United States. Today, we celebrate their incredible contributions over the last ten years, their success in this critical mission that transcends distinctions of race, color, gender, and religion, and we look forward with hope for continued spiritual and social service to communities across the country for many decades to come—thanks to your organization!*

*Through Hinduism, we learn that our relationships should be based on the strong foundations of love, harmony, and true respect for one another. In my home state, we call this the aloha spirit, which mirrors the underlying values and concepts of the Hindu faith. Thank you for your work to promote harmony between diverse cultures from the east and west though programs for young children, adults, and seniors, which strengthen the collective body, mind, and soul of the country.*

*Through your work, you are helping to promote inner spiritual peace, love for God, and love for others. When we are tasting such love for God, we are able to see beyond our external differences and designations, and recognize that we are all relatives in the deepest sense. By embracing this truth, which is a core message of all scriptures of the world, we can achieve real peace and harmony with others, no matter the different backgrounds we come from. Now more than ever, this is what we need in the world to bring about true peace and true happiness.*

*Please accept my sincere gratitude for the work that you do and for helping so many individuals through your programs, meditation and yoga sessions, free health fairs, workshops, and so much more. Best wishes for continued success in everything you do in service to God and others!*

*With sincere gratitude,*

Tulsi Gabbard

*Congresswoman Tulsi Gabbard*
*Serving the People of Hawaii's 2nd District*

*Presented on this 12th day of May 2017*

அன்றொரு நாள் புன்னை மரத்தடியில்,
கைவிடமாட்டேன் என்றொரு சத்தியம் செய்தாய்!
அந்த ஆதவனறியும்! இந்த ஆநிரையறியும்!
மாதவா! அதை மறந்தாய்! மாற்றுப்பாதை தீட்டுகின்றாய்!

வீடு தேடி ஓடிவந்தாய்! வீடுபேறு உனக்கென்றாய்!
கண்ணிற்கொரு விருந்து காதிற்கொரு விருந்து!
கருத்திற்கொரு விருந்தென பல்சுவை விருந்தளித்தாய்!
விதியின் வழியை மாற்றியமைத்தாய்!

சுற்றம் நட்பும் மறந்துவிட்டோமே!
சூழும் காலமும் அறியமாட்டோமே!
துச்சமாம் இவ்வுலகெனத் துயர் நீக்கி,
மிச்சம் உன் நினைவென வாழ்ந்துவந்தோம்!

கண்மூடி நாங்கள் களித்திருந்ததொரு சமயம்,
ஓடி ஒளிவேன் என்றொரு சூது செய்திட்டாய்!
ஓடி ஒளிவதற்குகந்த இடம் இப்பூவுலகில்
என் இதயம் விட்டுப் பிறிதொன்றுண்டோ? சொல்வாய் நீயே!

- ஸ்ரீமதி உமாலக்ஷ்மி




HUMBLE PRANAMS AT
THE LOTUS FEET OF GURUJI

DR SHRIRAAM MAHADEVAN
Consultant Endocrinologist
Endocrine & Speciality Clinic
Sri Ganesh Flats, Flat no.4, Ground floor,
Old no.72, New No. 460,T.T.K. Road,
Alwarpet, Chennai 600018
Tel: 044-24350090, Mob: 9445880090
Email: mshriraam@gmail.com
www.chennaiendocrine.com

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**

# மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை



# மது
# मधु

- ஸ்ரீ விஷ்ணுப்ரியா

**'மது' என்றால் தேன். இனியது என்று நாம் அறிவோம். இந்தச் சொல்லின் பல்வேறு அர்த்தங்களையும் அதிலிருந்து ஏற்படும் மற்ற சொற்களையும் சற்று பார்ப்போம்.**

ஆம்! 'மது' என்றால் தேன். அதனால்தான் வண்டிற்கு 'மதுகர' - அதாவது தேனைச் செய்வது என்று பொருள். வண்டுகள் புஷ்பங்களிலிருந்து தேனை முதலில் பருகுகின்றன. பிறகு தானே தேனைச் செய்கின்றன. தேனைப் பருகுவதால் வண்டுகளுக்கு 'மதுப' என்றும் பெயர். 'மதும் பாதி', தேனைக் குடிக்கிறது என்பதால் "மதுப". ராதை, ப்ரமர கீதத்தில் ஒரு வண்டைப் பார்த்து, உத்தவனோடு பேசுவதாகப் பேசும்போது, 'மதுப! கிதவ பந்தோ!' என்று அழைக்கிறாள். 'ஹே வண்டே! நீ ஒவ்வொரு புஷ்பமாகச் சென்று கொண்டிருப்பதால், உனது ஸ்நேஹம் நிலையானதல்ல. அதேபோல்தான் க்ருஷ்ணனும்!' என்று சங்கேதமாகக் கூறுகிறாள்போலும். வண்டிற்கு மற்றொரு பெயர் என்னவென்றால், 'மதுவ்ரத' என்பதாகும். ஏன் மதுவ்ரத என்ற பெயர் என்றால், தன் தேனடையில் சேர்த்துவைத்திருக்கும் தேனைப் பருகாமல் காத்துக் காத்து, வ்ரதம்போல் அதை உண்ணாமல் இருக்குமாம். அதனால், அதற்கு 'மதுவ்ரத' என்று பெயர் வந்துவிட்டது. ஆனால் பாவம்! அப்படி அது சாப்பிடாமல் சேர்த்துவைத்த தேனைத் தான் வேடர்களோ, மற்றவர்களோ வந்து எடுத்துச் சென்றுவிடுகிறார்கள். அதைத் தான் நாமும் தேன் என்று உபயோகப்படுத்திக்கொள்கிறோம்.

'மது' என்றால் தேன் என்று மட்டும் அர்த்தமல்ல. 'மது' என்றால் 'கள்' என்றும் பொருள்படும். கள் குடிப்பதற்கு, 'மது பானம்' என்று பெயர். பஞ்ச மஹா பாதகங்களில் அதுவும் ஒன்று.

'மது' என்ற பெயரில் ஒரு அசுரன் இருந்தான். மது-கைடபர்கள், என்று புராணங்களில் ப்ரசித்தம். அந்த மது என்ற அசுரனைக் கொன்றதால் பகவான் விஷ்ணுவிற்கு மதுஸூதனன் என்று பெயர். அதே போல 'மதுமதனன்' என்றும் பெயர். 'முக்தே மதுமதனம் அனுஸர', என்று அஷ்டபதியில் தோழி, ராதையைப் பார்த்து, 'கண்ணனைத் தொடர்ந்து செல்!', என்கிறாள். மதுவின் விரோதி என்பதால், 'மதுரிபு' என்றும் பெயர். 'இதி மதுரிபுணா ஸகி நியுக்தா' என்றும் அஷ்டபதியில் வாக்கியம் உள்ளது.

'மதுரா' என்ற ராஜதானி, முன்பொரு காலத்தில் 'மதுவனம்' என்றும், 'மதுபுரி' என்றும் அழைக்கப்பட்டுக்கொண்டிருந்தது. ஆகையால்தான் நாரதர், த்ருவனுக்கு உபதேசம் செய்துவிட்டு, 'புண்யம் மதுவனம் யத்ர ஸாந்நித்யம் நித்யதா ஹரே:', அதாவது, 'ஸ்ரீஹரியின் நித்ய ஸாந்நித்யம் கொண்ட மதுவனத்திற்குச் செல்', என்று அனுப்புவது, இன்றும் 'மதுரா' என்று அழைக்கப்படும் அந்த வடமதுரைக்குத்தான். ''மதுபுரி' என்ற மதுராவின் அரசனான கண்ணனுக்கும் 'மதுபதி' என்றே பெயர்.

'மது' என்ற சொல்லுக்கு மற்றொரு வித்தியாசமான பொருள் என்னவென்றால், வசந்தம் என்பது. சைத்ர மாதத்தில் வரும் வசந்தருதுவிற்கு 'மதுமாசம்' என்று பெயர். 'மதுமாசம் தன்னில் ஸரஸ ஸங்கீதம் பாடி', என்று நம் குருநாதர் ஒரு விருத்தம் எழுதியுள்ளார். ஸம்ஸ்கிருதத்தில் 'மது மாதவம்' என்று அந்த வசந்த ருதுவின் இரு மாதங்களுக்கும் பெயர்.

நாம் 'அதிமதுரம்' என்ற ஒன்றைப் பாலில் சேர்த்துச் சாப்பிடுவதுண்டு. அதற்கு ஸம்ஸ்கிருதத்தில் 'மதுயஷ்டிகா' என்று பெயர். அதைச் சாப்பிட்டால், குரல் மதுரமாக இருக்கும் என்று கூறுவார்கள்.

'மதுபர்கம்' என்று ஒன்று உள்ளது. வீட்டிற்கு வரும் விருந்தாளிகளுக்கு, உள்ளே நுழைந்ததும் அதைக் கொடுத்து, அவர்களைப் பூஜிப்பது என்று ஒரு வழக்கம் புராண காலங்களில் இருந்துள்ளது. 'மதுபர்கம்' என்றால், தேன், தயிர், நெய், நீர் இவைகளின் கலவை. பாகவதத்தில் அக்ரூரர் கண்ணனை அழைத்துச் செல்ல பிருந்தாவனம் வந்தபோது, நந்தகோபர் அவரை முறைப்படி ஸ்வாகதம் செய்து (வரவேற்று), 'மதுபர்கம்' அளித்து, பாதங்களை நீரால் பிரக்ஷாலனம் (அலம்பிவிடுதல்) செய்தார், ('பிரக்ஷால்ய விதிவத் பாதௌ மதுபர்கார்ஹணம் ஆஹரத்') என்று வருகிறது.

அதுபோல் பல சொற்கள் ''மது'' என்ற சொல்லிலிருந்து ஏற்படுகின்றன.



# குருகுலம்

## குறையொன்றும் இல்லாத கல்விமுறை

கல்வி பயிலும் காலம் என்பது மனித வாழ்க்கையில் மிக முக்கியமான தவிர்க்க இயலாத காலம் என்றால் அது மிகையாகாது. ஏனென்றால், சாமான்ய மனிதனின் ஆற்றல், எண்ணம் மற்றும் வருங்காலம் என்பது அதனைச் சுற்றியே அமைந்துள்ளது! தற்காலத்து கல்விமுறையானது, இந்த உலகவாழ்வில், வருங்காலத்தில் ஒரு வசதியான, சொகுசான மற்றும் அதிகாரம் பெறுவதற்கான ஒரு வாழ்க்கை வாழ்வதற்கான திறனை மட்டும் அளிப்பதாக அமைந்துள்ளது. ஒரு சிறிதளவுகூட, நல்லொழுக்கத்தை போதிப்பதற்கான செயல்முறை திட்டம் இல்லாத ஒரு அடிப்படை கல்விமுறையே தற்காலத்தில் இருப்பதை நாம் காணமுடிகின்றது.

ஆனால், அக்காலத்து குருகுல கல்விமுறையானது தற்கால கல்விமுறைக்கு முற்றிலும் மாறானது. தனிமனித முன்னேற்றத்திற்கான, இகவுலக வாழ்க்கைக்கான தொழில்முறைக் கல்வியைத் தருவதோடு, இவ்வாழ்வை தர்மத்தோடும், அதற்கும் மேலாக, நல்முறையில் வாழ்வதற்கான ஒரு முழுமையான, உயர்ந்த, பலனளிக்கும் கல்வியைக் கொன்றது. மேலும், ஆன்மீகப் பாதைக்கான விதைகளைத்தூவி வாழ்க்கையின் பயனான இறைவனை அடைவதற்கானப் பாதையையும் குருகுல கல்வியானது காட்டுகின்றது.

குருகுல கல்விமுறையில் மாணவனானவன் தனது குருவுடனும் அவர்களின் குடும்பத்துடனே வருடக்கணக்கில் தனது கல்வி முடியும்வரை இருந்து கல்வி பயில்கின்றான். இதற்காக குருவானவர் மாணவனிடமிருந்து எந்த ஒரு தக்ஷனையும்/கட்டணத்தையும் கல்வி பயிலும் காலகட்டத்தில் பெறுவது இல்லை. கல்வி முடிந்து வீடு திரும்பும் தருவாயில், மாணவனின் பொருளாதார நிலைமைக்கும் தகுதிக்கும் ஏற்ப அவர்கள் விரும்பிக் கொடுப்பதை விரும்பிப் பெறுகின்றார்.

குருகுலத்தில் அக்கால வாழ்க்கைக்குத் தேவையான போர்க்கலை, குதிரையேற்றம், வர்த்தகம், விவசாயம் மற்றும் பல கற்பிக்கப்பட்டது. மேலும் வேதம், சாஸ்திரங்கள், புராணங்கள், உபநிடதங்கள் கற்பிக்கப்பட்டதோடு அவற்றின் சாரத்தை தங்களுடைய வாழ்க்கையில் எப்படி நடைமுறைப் படுத்துவது மற்றும் குல தர்மத்தின்படி எப்படி வாழ்வது ஆகியன கற்பிக்கப்பட்டன.

வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தும் ஓரிடத்திலேயே கற்பிக்கப்பட்டதால் மாணவர்கள் நற்குணங்களான நல்லொழுக்கம், பிறரை மதித்து நடத்தல், பிறரிடம் சமமான நடத்தை, பணிவு மற்றும் சேவை மனப்பான்மை ஆகியவற்றினை மிக எளிதாக கற்க முடிந்தது. அவர்களுக்கு ஒரு குருவால் கொடுக்க முடிந்ததான உயரிய ஞானமான/அறிவான இறைவனை அடைவதற்கான பலவழிகள் போதிக்கப்பட்டன.

குருவானவர் ஒவ்வொரு மாணவனையும் தன்னுடைய சொந்த மகனைப் போலவே முழுகவனத்துடனும் பொறுப்புடனும் கண்போல் காப்பார். குருவானவர் மாணவனுக்கு கல்வியோடு உறைவிடம் மற்றும் உணவினை வழங்குவார். மாணவனோ குருவின் குடும்ப உறுப்பினராகவே மாறி, தனது சேவையாக உணவு சமைக்க உதவுவது, இருப்பிடத்தைத் தூய்மை செய்வது, துணிகளைத் துவைத்துக் கொடுப்பது மற்றும் பலவற்றை செய்வான். இப்படி குருவிற்குச் செய்யும் சேவையே மிக உயர்ந்த சேவையாக நம்முடைய தர்மத்தில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு குருவிற்குச் செய்யும் சேவையும் ஒரு மாணவனுடைய கல்விமுறையில் ஒருங்கிணைக்கப்பட்ட ஒன்று. இதுதான் நம் குருகுல கல்விமுறையில் உள்ள குருசிஷ்ய உறவுமுறையின் சிறப்பு!

பகவானும், இராமனாக க்ருஷ்ணனாக அவதாரம் செய்தபோது, குருகுலவாசம் செய்து குருசேவை செய்தார்கள் என்பதே குருசேவையின் மேன்மையைக் கூறுவதாக உள்ளது! ஸ்ரீமத் பாகவதத்தில் குருசிஷ்ய உறவினைக் குறிக்கும் ஸ்லோகம் உள்ளது "குரோர் அனுக்ரஹேநைவ புமான் பூர்ணஹ ப்ரஷாந்தயே".

சுதாமனும், க்ருஷ்ணனும் குருவான ஸ்ரீ சாந்திபனியிடம் குருகுல வாசம் செய்து ஆருயிர் நண்பர்களாயினர். பிற்காலத்தில் க்ருஷ்ணர் துவாரகாவின் மன்னனானான். ஆனால், சுதாமனோ வறுமையில் வாடினான். ஆனாலும் அவர்கள் இருவரும் மனசாந்தியுடனே வாழ்ந்தனர். இதை க்ருஷ்ணர் பின்னாட்களில் குறிப்பிடும்போது, அவர்களின் வாழும் சூழ்நிலை வெவ்வேறாக இருந்தபோதும், அவர்களின் மனசாந்திக்குக் காரணம் அவர்களின் குருவான ஸ்ரீ சாந்தீபனியின் அருளே என்று கூறுகின்றார். மேலும், குருவினுடைய அருளே தான் கற்றவற்றைத் தன்னுடைய வாழ்நாளில் தேவையான நேரத்தில் நினைவுகூற முடிந்ததாக கண்ணன் கூறுகின்றார்! குருகுல வாழ்க்கையின் மிகமுக்கியமானது, குருசேவை பெறுவதற்கான அரிய வாய்ப்பு. உத்தம குருவானவர், ஒருவனுக்குக் கிடைக்க அரியதான வைகுண்டத்தையே அருளிட முடியும் எனும்போது இகவாழ்வின் தேவைகளைத் தீர்ப்பது என்பது எம்மாத்திரம்?

பகவான் ஆதிசங்கரரின் சீடர்களில் ஒருவர் கிரி. சீடர்களிலேயே மிகவும் மந்த புத்தி உடையவராக அவர் இருந்தார். ஆனால், பெரும்பாலான நேரத்தை அவர் குருசேவையிலேயே பக்தியுடன் செலவழித்து வந்தார். ஒருமுறை ஆதிசங்கரர் தன்னுடைய சீடர்களுக்கு ப்ரம்ம சூத்திரத்தின் மிகக்கடினமான பாகத்தைப் போதிப்பதாக இருந்தது. ஆனால், கிரியோ ஆச்சாரியரின் துணிகளைத் துவைப்பதில் கவனத்தையும் நேரத்தையும் செலவிட்டதால் வருவதற்குத் தாமதமாகிக் கொண்டிருந்தது. கிரிக்கோ எதுவும் புரியப் போவதில்லை அவனுக்காக குருவானவர் தாமதிப்பது நேரத்தை வீணாக்குவதாகும் என்று மற்ற சீடர்கள் முணுமுணுத்தனர். இதனை கவனித்த குருவானவர் மிகவும் வருந்தி, தன்னிடம் அன்பும் பக்தியும் கொண்ட மந்தபுத்தி சீடரிடத்துக் கருணை கொண்டு, அவனைக் கடைக் கண்களால் கடாக்ஷித்து அருள்புரிந்தார். வெகுதொலைவில் ஆற்றங்கரையில் இருந்த கிரி, குருவின் அருளினால் ஞானம் பெற்று மிகவும் உயரிய 'தோடகாஷ்டகம்' செய்தார். பின்னாளில் மிக உயர்ந்த ஆச்சாரியராகி 'தோடகாச்சாரியார்' என்று அறியப்பட்டார்.

பகவான் ஸ்ரீ க்ருஷ்ணர் ஸ்ரீமத் பாகவதத்தில் யோகமோ, தவமோ ஒருவனுக்கு மகிழ்ச்சியைத் தருவதில்லை, குருவிற்குச் செய்யும் சேவையே உண்மையான மகிழ்வைத்தரும் என்கின்றார்.

நாஹம் இஜ்யா ப்ரஜாதிப்யாம் தபசோபசமென வா|
துஷ்யேயம் சர்வபூதாத்மா குரு சுஸ்ரூஷயா யதா||

- அனுஷா ரமேஷ், California
மொழிபெயர்ப்பு: பாலாஜி ராமச்சந்திரன்

# ஆளுமை

ஆளுமை என்பதை செல்வாக்கு என்று சொல்லலாம். ஒரு மனிதன் மிக வேகமாக ஒரு மண் சாலையில் குதிரைச் சவாரி செய்துகொண்டிருந்தான். குதிரையின் வேகத்தைப் பார்த்துவிட்டு, அவனுடன் குதிரைச் சவாரி செய்துகொண்டிருந்த மற்றொரு சக பயணி, ‘‘எங்கே செல்கிறாய்?’’ என்று கேட்டான். முதலாமவன் என்ன சொன்னான் தெரியுமா?, ‘‘எனக்கெப்படித் தெரியும்? குதிரையைக் கேள்’’ என்றான். சில நேரங்களில் நாம் குதிரையைச் செலுத்துவதற்குப் பதிலாக, குதிரை நம்மைச் செலுத்துகிறது. உண்மையில் சிறந்த சவாரி எது தெரியுமா? குதிரையுடன் ஒரு நல்லுறவு வைத்துக்கொண்டு, அதன் மீது கவனம் செலுத்தி, அதற்குண்டான மரியாதையைக் கொடுத்து, அதைப் புரிந்துகொண்ட பின், அதை நமது கட்டுக்குள் கொண்டுவந்து அந்தக் குதிரையின் திறமையை முழுவதுமாகப் பயன்படுத்திக் கொள்வதேயாகும். நமது உணர்ச்சிகளும், பழக்கவழக்கங்களுமே நமது குதிரை. அவை நம்மைப் பல இடங்களுக்கு அழைத்துச் சென்றுவிடும். உண்மையில் நாம் என்ன விரும்புகிறோம்? அவைகளின் ஆளுமைக்குட்பட்டு, அவை இழுத்துச் செல்லும் இடங்களுக்கு நாம் செல்வதையா? அல்லது நமது விருப்பப்படி அவற்றைச் செலுத்திக் கொண்டு செல்வதையா?

முதலில் நாம் செய்யவேண்டியது என்னவென்றால், நமது பழக்க வழக்கங்களையும் உணர்ச்சிகளையும் கவனிக்க ஆரம்பிப்பதுதான். அவற்றின்மீது நாம் செலுத்தும் கவனமும், விழிப்புணர்வுமே நம்மை சரியான வழியில் அழைத்துச் சென்றுவிடும்.

இந்த விஷயத்தைப் பற்றி இன்னும் சற்று விரிவாகப் பிறகு காண்போம். எப்போதும் மகிழ்வுடன் இருப்போம், மகிழ்வான உணர்வை நம்மைச் சுற்றிப் பரவச் செய்வோமாக.

- *MK* ராமானுஜம்



# சைதன்ய மஹாப்ரபு - 9

## விச்வரூபரின் துறவு


ஓவியர் : பாலமுரளி

வருடங்கள் கழிந்தன. ஜகன்னாதமிச்ரரும் சசிமாதாவும் விச்வரூபனுக்கு திருமணம் செய்ய விரும்பினர்


இதற்கிடையில் விச்வரூபன் அத்வைதாசாரியாரின் பாடசாலையில் உத்தமமான ஞானத்தை பற்றி கற்று கொண்டிருந்தான்.




வீட்டிற்குள் சென்றதும், விச்வரூபன் தன் அறையிலிருந்து பகவத் கீதையை எடுத்து வந்தான்.




விடியற் காலையில் எல்லோரும் உறங்கிக் கொண்டிருக்கும்பொழுது, விச்வரூபனும் தன் ஒன்று விட்டசகோதரன், லோகநாதனும் வீட்டை விட்டு வெளியே சென்றனர் .




காலையில் ஜகன்னாத மிஸ்ரர் எழுந்ததும் விச்வரூபனும் லோகநாதனும் காணாததை பார்த்து சசிமாதாவைக் கேட்டார்.




அவர்கள் எல்லா இடத்திலும் தேடினர். அப்பொழுது அத்வைதாச்சாரியார் அங்கு வந்தார்.







விச்வரூபன் ஸந்யாச மார்க்கத்தை அடைந்து மகா புருஷராக விளங்கினார். அத்வைதாச்சாரியாரின்ஆசீர்வாதமும் உண்மை ஆனது.

# சனாதன புதிர் 90

## ஆத்ரேயன்

1. மதுராபுரியின் அரசன் யார்? எந்த வம்சத்தைச் சார்ந்தவன்? அவனது பிள்ளையின் பெயர் என்ன?
2. உக்கிரசேனனுடைய புதல்வன், புதல்வியின் பெயர் என்ன?
3. வஸுதேவர் யாரை மணந்தார்?
4. ஸ்வாயம்புவ மன்வந்தரத்தில் வசுதேவர், தேவகியின் பெயர் என்ன? அவர்கள் பகவானிடம் என்ன வரம் வேண்டினார்கள்?
5. பகவான், என்ன பெயருடன் அவர்களுக்கு ஸ்வாயம்புவ மன்வந்திரத்தில் குழந்தையாகப் பிறந்தார்?
6. மறு ஜன்மாவில் ஸுதபஸ் - ப்ருச்னி இவர்களின் பெயர் என்ன? இவர்களுக்கு பிறந்த குழந்தையின் பெயர் என்ன?
7. ஸுதபஸ் - ப்ருச்னியின் மூன்றாவது பிறவியில் பெயர் என்ன? குழந்தையின் பெயர் என்ன?
8. வஸுதேவர்-தேவகிக்கு விவாகம் ஆகி ரதத்தில் ஏறி பிரயாணம் செய்ய ஆயத்தமாகும்பொழுது குதிரைகளின் கடிவாளத்தை யார் பிடித்தார்?
9. கடிவாளம் பிடித்து தேரை ஓட்டிச்சென்றபொழுது கம்சனைப் பார்த்து என்ன சொல்லியது?
10. கம்சன் எந்த குலத்தை சார்ந்தவன். அசரீரியின் சொல்லைக் கேட்டதும் என்ன செய்தான்?

## பதில்கள்

1. சூரஸேனன் - யது குலத்தைச் சார்ந்தவர், வஸுதேவர்
2. கம்ஸன்; தேவகி
3. தேவகியை
4. ஸுதபஸ் - ப்ருச்னி, பகவானைப் போன்ற குமாரன் வேண்டும் என்று வரம் கேட்டார்கள்
5. ப்ருச்னிகர்ப்பன்
6. காச்யபர் - அதிதி; உபேந்திரன் - வாமனன் என்று மற்றொரு பெயர்
7. வஸுதேவர் தேவகி - பகவான் கிருஷ்ணர்
8. தேவகியின் தமையனான கம்சன்
9. மூடனே! யாரை தேரில் கொண்டு செல்கிறாயோ, அவளது எட்டாவது கர்ப்பம் உன்னைக் கொல்லப்போகிறது.
10. போஜ குலத்தைச் சார்ந்தவன் - தங்கையின் கேசத்தைப் பிடித்து வாளை கையில் எடுத்துக் கொல்வதற்குத் தயாரானான்.

# PM Narendra Modi releases stamp on 1,000th birth anniversary of Sri Ramanujacharya

May 1, 2017
Financial Express




**பகவத் ராமானுஜரின் 1000மாவது பிறந்த நாளை ஒட்டி ராமானுஜாச்சாரியாரின் உருவம் பொறித்த நினைவுத் தபால்தலையை நமது பாரதப் பிரதமர் திரு நரேந்திர மோடி மே 1ஆம் தேதியன்று புது தில்லியில் வெளியிட்டார். தபால் தலை வெளியிடும் நிகழ்ச்சியில் திரு. மோடி அவர்கள், ‘‘பகவத் ராமா னுஜாச்சாரியாரின் வாழ்க்கை, சமூக சேவை, இறைத் தொண்டு ஆகியவற்றை உள்ளடக்கியதோடு மட்டுமின்றி இறைத் தத்துவங்களை நிரூபிக்கும் வண்ணம் அமைந்துள்ளது’’ என்று குறிப்பிட்டார். தனது ட்விட்டர் பக்கத்திலும் திரு. மோடி அவர்கள், ராமானுஜரைப் பற்றி குறிப்பிடும்போது, ‘‘ராமானுஜர் தனது உயர்ந்த எண்ணங்களால் இன்றளவிலும் பலரை ஈர்த்து வழி நடத்துகிறார்’’ என்று கூறியுள்ளார். மேலும் அவர், ‘‘இறைவனைப் பிற உயிர்களிலும், பிற உயிர்களை இறைவனிடத்திலும் காணும் தெய்வீகத்துறவி ஸ்ரீ ராமானுஜர். அவர் இறைவனின் அனைத்து பக்தர்களையும் சமமாகக் கண்டவர். சமூகத்தில் நிலவிய பாரபட்சங்களை உடைத்தெறிந்தவர்’’ என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

| சத்சங்க நிகழ்ச்சிகள் | |
|---|---|
| 5 ஜூன் 2017 | ஏகாதசி |
| 10,11 ஜூன் 2017 | சிதம்பரம் நாமத்வார் ஆண்டு விழா |
| 20 ஜூன் 2017 | ஏகாதசி |
| 4 ஜூலை 2017 | ஏகாதசி |

## அறிவிப்பு

**அனைத்து வாசகர்களும், தங்களது தொலைபேசி எண்ணை, தங்களது சந்தா எண்ணுடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

Email: helpdesk@madhuramurali.org
Ph: "24895875"

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு தெரிவிக்க வேண்டிய விஷயங்களை அனுப்பவேண்டிய முகவரி

Dr.A.BHAGYANATHAN,
Personal Secretary to
HIS HOLINESS
SRI SRI MURALIDHARA SWAMIJI
Plot No 11, Door No 4/11,
Netaji Nagar Main Road,
Jafferkhanpet, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email :
contact@namadwaar.org

மதுரமுரளி

- Publisher : S. Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
- Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
- Advertisements in Madhuramurali are invited.



சென்னை திருவல்லிக்கேணி
ஸ்ரீ பாண்டுரங்க கோயிலில்
ஸம்வத்ஸர அபிஷேக ஆராதனை,
2 May

Registered with The Registrar of Newspapers for India
R.No 62828/95
Regd. No. TN/CC(S)DN/119/15-17

Date of Publication: 1st of every month
Date of Posting: 5th and 6th of every month
Licensed to post without prepayment
WPP No. TN/PMG(CCR)WPP—608/15-17



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No2, Old No 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai – 83 and Printed by Mr R. Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A. Sivakasi Co-op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar